**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 129/ 2024**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 08.10.2025 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : அமராவதி | Age | : |
| Father's Name | : | Village | : |
| Calling | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு முழுவதும் கூடிவிட்டது என்றால் தற்போது வரை எனக்கு வலி இருந்து வருகின்றது. நான் எனது மகள் வீட்டில் இருக்கின்றேன். விபத்து நடந்தபோதும் நான் எனது மகள் வீட்டில்தான் இருந்தேன். என் மீது மோதிய வாகனம் எனது பின் பக்கத்தில் மோதியது என்றால் சரிதான். என் மீது வாகனம் மோதிய பின்புதான் அதை பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவம் மெயின் ரோட்டில் நடைபெற்றது. விபத்து நடைபெற்ற சாலை 40 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றபோது இரவு நேரம் ஆகும். அங்கு தெரு விளக்குகள் இருந்தன. காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. முழுவதும் குணமடைந்த பின்புதான் மருத்துவ சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். மருத்துவ செலவுகள் ரூ.50,000/- என்று வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் ச ரியல்ல. எனக்கு வலது கையில் எலும்பு முறிவு முழுவதும் கூடிவிட்டதால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் கூலி வேலை பார்த்து மாதம் ரூ.15 ஆயிரம் சம்பாதித்தாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எந்தவித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றாலும், விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதைதான் காரணம் என்றாலும் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றாலும், அது கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |